©
GOVERNMENT OF TAMIL NADU
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 125A] சென்னை, வியாழக்கிழமை, ஏப்ரல் 13, 2023
பங்குனி 30, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2054

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2023ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/2023**

**1947–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அரசு, அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

22–B, 22–C, 22–D மற்றும் 22–E எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

2. 1947–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் 22–A ஆம் பிரிவுக்கு பின்பு, பின்வரும் பிரிவுகளானவை உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் XXXVI/1947.

"22–B. **குடிநீர்.-** பணியமர்த்துநர் ஒவ்வொருவரும், கடை அல்லது நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து நபர்களுக்கும், வசதியாக அமைந்துள்ள பொருத்தமான இடங்களில், போதிய அளவு சுகாதாரமான குடிநீரை வழங்குவதற்கும் பராமரிப்பதற்கும் பயனுள்ள ஏற்பாட்டினைச் செய்தல் வேண்டும்.

22–C. **கழிப்பிடம் மற்றும் சிறுநீர்க்கழிப்பிடம்.-** பணியமர்த்துநர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படலாகிறவாறு, போதிய எண்ணிக்கையில் கழிப்பிடம் மற்றும் சிறுநீர்க்கழிப்பிடங்களை ஏற்பாடு செய்து தருதல் வேண்டும், அவை பணிபுரியும் நபர்களுக்கு வேலை நேரத்தின் அனைத்து நேரங்களிலும், அணுகக்கூடியவாறு மிகவும் வசதியானதாக அமைந்திருத்தல் வேண்டும்.

22–D. **ஓய்வறை மற்றும் உணவறை.-** (1) பணியமர்த்துநர் ஒவ்வொருவரும், பணிபுரியும் நபர்களுக்காக, குடிநீர் வசதியுடன் கூடிய போதிய மற்றும் பயனுள்ள ஓய்வறை மற்றும் உணவறையினை ஏற்பாடு செய்து தருதல் வேண்டும்.

(2) ஓய்வறை மற்றும் உணவறையானது, போதிய காற்றோட்டத்துடனும் வெளிச்சத்துடனும் இருத்தல் வேண்டும் மற்றும் அவை சுத்தமாகவும் சீரொழுங்காகவும் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓய்வறை மற்றும் உணவறையானது, போதிய நாற்காலிகள் அல்லது சாய்வு இருக்கைகளுடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

22–E. முதலுதவி.– பணியமர்த்துநர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படலாகிறவாறான முதலுதவி வசதிகளை பணிபுரியும் இடத்தில், ஏற்பாடு செய்து தருதல் வேண்டும்.".

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1947–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் XXXVI/1947), கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்களின் வேலைநேரம், வார ஓய்வு, விடுமுறைகள், உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு போன்ற அத்தகைய வேலை நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துகிறது.

2. இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது, கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு மற்றும் பணி நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதற்காக, 2016–ஆம் ஆண்டு மாதிரி கடைகள் மற்றும் நிறுவனங்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணிநிபந்தனைகளை ஒழுங்குபடுத்துதல்) சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது மற்றும் மாதிரி சட்டமுன்வடிவினை ஏற்றுக்கொள்வதன் மூலமோ அல்லது மாநிலத்தின் தேவைகளுக்கேற்றவாறு மாதிரி சட்டமுன்வடிவின் வகைமுறைகளுக்கிணங்கியவாறு நடைமுறையில் உள்ள சட்டத்தின் வகைமுறைகளை திருத்துவதன் மூலமோ, மாநில கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தினை மாற்றியமைக்குமாறு மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டது.

3. கவனமான பரிசீலனைக்குப் பின்பு, தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டும், குடிநீர், கழிப்பிடம் மற்றும் சிறுநீர்கழிப்பிடம் மற்றும் முதலுதவி வசதிகள் தொடர்புடைய வகைமுறைகள் தொடர்பான மாதிரி சட்டமுன்வடிவின் வகைமுறைகளை ஏற்றுக்கொள்வதெனவும், மேற்சொன்ன நோக்கத்திற்காக, 1947–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் XXXVI/1947), திருத்தம் செய்வதெனவும், அரசானது முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. கணேசன்,**
*தொழிலாளர் நலன் மற்றும்*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்ட முன்வடிவின் 2ஆம் கூறின் மூலம், 1947–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில், (தமிழ்நாடு சட்டம் XXXVI/1947) உட்புகுத்துவதற்கு முன்மொழியப்பட்ட 22–C மற்றும் 22–E பிரிவுகளானவை, அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**சி.வி. கணேசன்,**
*தொழிலாளர் நலன் மற்றும்*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 ஏப்ரல் 13.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.